# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS) ~~(Under Section 154 Cr.P.C.)~~
(பா.நா.பா.ச பிரிவு 173ன்படி) ~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C 8101979

1. District மாவட்டம் : மதுரை PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 8/2024 Date: நாள் 6-8-2024

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Sections பிரிவுகள்: 7 of PC Act 1988
(ii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: as amended by PC
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: (Amendment) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 1) 11-7-2024 at 15.30 hrs
2) 15-7-2024 at 10.30 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 3) 5-8-2024 at 11.40 hrs and 16.50 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 6-8-2024 Time : நேரம் 07.15 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 6-8-2024 Time : நேரம் 08.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தட்டச்சு செய்யப்பட்ட மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 60 கி.மீ தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சின்னரெட்டிபட்டி, பேரையூர் தாலுகா மதுரை மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. முகைதீன் ஷெரிப் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சர்தார்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் பெட்டிக்கடை (g) Address : முகவரி 4/364-29, மக்காரம் பாறை, வலையங்குளம் திருப்பரங்குன்றம் தாலுகா, மதுரை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி. மீனாட்சி, கிராம நிர்வாக அலுவலர்
சின்னரெட்டிபட்டி, பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 6/8/24 [signature] 6-8-24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
6-8-24 / 0900 hrs.

Name: பெயர் N. Bharathi Priya
Rank: நிலை Inspector of Police No. எண்
VSAC, Madurai

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

<u>அய்யா, பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,</u>

இன்று 06.08.2024-ஆம் தேதி காலை சுமார் 07.15 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் தாலுகா வலையங்குளம் மக்காரம்பாறை கதவு எண். 4/364-29 என்ற முகவரியில் வசித்து வரும் சர்தார் என்பவரது மகன் முகைதீன் ஷெரிப் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் S. முகைதீன் ஷெரிப், த/பெ.சர்தார், கதவு எண். 4/364-29, மக்காரம்பாறை, வலையங்குளம், திருப்பரங்குன்றம் தாலுகா, மதுரை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் மதுரை மாவட்டம் அருப்புக்கோட்டை ரோட்டில் உள்ள வலையங்குளம் கிராமத்தில் எனது அம்மா மதினா, அப்பா சர்தார், எனது மனைவி, மகள் மற்றும் மகனுடன் குடியிருந்து வருகிறேன். நான் போலியோ பாதிப்பினால் எனது இரண்டு கால்களால் நடக்க முடியாத மாற்றுத் - திறனாளியாவேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வலையங்குளம் அருப்புக்கோட்டை ரோட்டில் பெட்டிக்கடை வைத்து நடத்தி வருகின்றேன். எனது அப்பா இராமேஸ்வரம் துறைமுகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து கடந்து 15 ஆண்டுகளுக்கு முன்பு விருப்ப ஓய்வு பெற்றார். என் உடன் பிறந்தவர்கள் 5 பேர். அதில் எனது அக்கா பெபினா அவர்களின் மாமியார் ஷாபேகம் பேரையூரில் சின்னாரெட்டிபட்டி கிராமத்தில் திருசெந்தூர் கார்டன்ஸில் குறைந்த விலையில் வீட்டு மனைகள் (பிளாட்ஸ்) வாங்கி இருப்பதாக தெரியவந்தது. ஆகையால் எனது அப்பா அவரது பெயரிலும், எனது அம்மாவின் பெயரிலும், இணைந்து திருச்செந்தூர் கார்டன்ஸில் கடந்த 21.02.2011-ம் தேதி சின்னாரெட்டிபட்டி கிராம புஞ்சை சர்வே எண். 93/3C –ல் கட்டுப்பட்ட ஏக்கர் 2 செண்ட் 96-யை பிளாட்களாக பிரித்து இருப்பதில் லெட்சுமி பாலகிருஷ்ணன் வாளாகம் என பெயரிட்டு விற்ப்னை செய்யப்பட்டதில் பிளாட் எண். 2 மற்றும் பிளாட் எண். 28 ஆகிய பிளாட்களில் கட்டுப்பட்ட 2418 ச.அ. மனையிடத்தை திரு.அழகர்சாமி மனைவி திருமதி. அன்னபூரணி அவர்களிடமிருந்து கிரையம் பெற்று பேரையூர் சார்-பதிவாளர் அலுவலக ஆவண எண். 1130/2011-ன் படி பதிவு செய்துள்ளார்கள். அதே திருச்செந்தூர் கார்டன்ஸ் பிளாட்களில் எனது மாமா அலிபாதுஷா மற்றும் அக்கா பெபினா ஆகியோரும் வீட்டு மனை வாங்கியுள்ளார்கள். எனது அப்பா மற்றும் அம்மா பெயரில் வாங்கிய இரண்டு பிளாட்களுக்கும் தற்போது வரை பட்டா உட்பிரிவு செய்து வாங்கவில்லை. எனவே நான் கடந்த 11.07.2024-ம் தேதியன்று காலை 9 மணியளவில் சின்னாரெட்டிபட்டி கிராமத்திற்கு சென்று எங்களது பிளாட்டுகளை பார்த்துக் கொண்டிருந் தபோது, அங்கிருந்தவர்களிடம் பட்டா பெறுவது சம்பந்தமாக விசாரிக்க, எங்களது பிளாட்

அருகே உள்ள பாப்பநாயக்கம்பட்டி தலையாரி திருமதி பிரபா ராணி அவர்களிடம் கேட்கும்படி கூறி, அவரது செல்எண். 9787147047-யை என்னிடம் கொடுத்தார்கள். உடனே நான் எனது செல்போனிலிருந்து திருமதி. பிரபா ராணி செல்லுக்கு பேசி, பட்டா குறித்து கேட்டபோது, தான் வெளியே இருப்பதாகவும், எங்களை பாப்பநாயக்கம்பட்டி VAO ஆபிஸில் காத்திருக்கும்படி கூறினார். நானும் எனது அப்பா, தாய்மாமா அலிபாதுஷா, அத்தை ஆகியோருடன் பாப்பநாயக்கம்பட்டி VAO ஆபிஸ் அருகே காத்திருந்தோம். பின்னர் காலை 11.30 மணியளவில் வந்த தலையாரி திருமதி. பிரபா ராணி அவர்களை சந்தித்து கேட்ட போது, அவர் எங்களது பிளாட்கள் உள்ள இடம் சின்னாரெட்டிபட்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்குதான் வரும் எனக்கூறி சின்னாரெட்டிபட்டி கிராம நிர்வாக அலுவலர் திருமதி. மீனாட்சி அவர்களிடம் திருமதி பிரபா ராணி அவர்கள் தனது கைபேசியிலிருந்து பேசி, நாங்கள் பட்டா கேட்டு வந்த விபரத்தை தெரிவித்து, திருமதி மீனாட்சி அவர்களின் செல் எண் 6380375587 எண்ணை என்னிடம் கொடுத்து விட்டு, திருமதி. மீனாட்சி அவர்கள் T.கல்லுப்பட்டியில் உள்ள அவரது வீட்டில் இருப்பதாகவும், T.கல்லுப்பட்டியில் உள்ள பஸ் டிப்போ அருகே சென்று VAO திருமதி. மீனாட்சி அவர்களின் செல்லில் தொடர்பு கொள்ள சொன்னார். உடனே நாங்களும் T.கல்லுப்பட்டியில் உள்ள பஸ் டிப்போ அருகே சென்று எனது செல் எண். 9751583062 லிருந்து VAO திருமதி மீனாட்சி அவர்களின் செல் எண் 6380375587-யை தொடர்பு கொண்டு பேசியபோது திருமதி. மீனாட்சி அவர்கள் பஸ் டிப்போ எதிரே உள்ள ரிலையன்ஸ்க்கு பக்கத்து சந்தில் உள்ளே இடது பக்கம் உள்ள நான்காவது வீட்டிற்கு வரும்படி கூறினார். அதன்படி நாங்கள் அனைவரும் அவருடைய வீட்டிற்கு சென்றோம். அவரது வீட்டில் எங்களது ஆவணங்களை பார்வையிட்டுக் கொண்டிருக்கும் போது அவசர வேலையாக வெளியில் செல்லவேண்டியதிருப்பதால் எங்களை சின்னாரெட்டிபட்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று காத்திருக்கும்படி கூறிவிட்டு சென்று விட்டார். நாங்களும் அன்று மாலை 3 மணி வரை சின்னாரெட்டிபட்டி கிராம நிர்வாக அலுவலகத்தில் காத்திருந்தோம். அவ்வாறு காத்திருக்கும் போது நான் கிராம நிர்வாக அலுவலர் திருமதி. மீனாட்சி அவர்களை இரண்டு முறை தொடர்பு கொண்ட போது சீக்கிரம் வந்து விடுவதாக கூறினார். பின்னர் திருமதி. மீனாட்சி அவர்கள் அன்று (11.07.2024) மாலை சுமார் 03.30 மணிக்கு சின்னாரெட்டிபட்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வந்தார்கள். அப்போது எனது அப்பா மற்றும் அம்மா பெயரிலுள்ள கிரைய ஆவணம், எனது தாய்மாமா அலிபாதுஷா அவர்களின் பெயரிலுள்ள கிரைய ஆவணம், வில்லங்க சான்று, பழைய பட்டா, லேஅவுட் மற்றும் ஆதார் அட்டை ஆகியவற்றின் நகல்களை திருமதி. மீனாட்சி அவர்களிடம் கொடுத்தோம். அவர் எங்களது ஆவணங்களை பார்வையிட்ட பின்னர், நேரடியாக சென்று மனையிடத்தையும் பார்வையிட்டார். பின்னர் பட்டா உட்பிரிவு

செய்தற்கு ஆன்லைனில் மனு செய்து விட்டீர்களா என்று கேட்டார். நாங்கள் இன்னும் மனு செய்யவில்லை என்று கூறினோம். பின்னர் திருமதி. மீனாட்சி அவர்கள் எங்களது மனைகளுக்கு பட்டா உட்பிரிவு செய்து வழங்க, ஒரு பிளாட்க்கு ரூபாய் நாலாயிரம் வரை செலவாகும் என கூறி, பணத்தை கேட்டார். நாங்கள் அவரிடம் தற்போது பணம் கொண்டு வரவில்லை ஏற்பாடு செய்துவிட்டு வருகிறோம் என்று கூறினோம். அதற்கு திருமதி மீனாட்சி அவர்கள் ஆன்லைனில் பட்டா மாறுதல் செய்ய மனு செய்துவிட்டு, பணத்தை ஏற்பாடு செய்து கொண்டு வாருங்கள் என்று தெரிவித்தார். பின்னர் கடந்த 15.07.2024-ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு, VAO திருமதி. மீனாட்சி அவர்கள் அவரது செல்எண் 6380375587 லிருந்து எனது செல் எண். 9751583062 ற்கு தொடர்பு கொண்டு, ஆன்லைனில் விண்ணப்பம் செய்யவில்லையா எனக்கேட்டார். அதற்கு நான், இன்றுதான் ஆன்லைனில் விண்ணப்பம் செய்ய வேண்டும் எனக்கூறினேன். அதற்கு அவர் சீக்கிரம் ஆன்லைனில் விண்ணப்பம் செய்துவிட்டு, நான் ஏற்கனவே சொன்னது போல் ஒரு பிளாட்க்கு ரூபாய் நாலாயிரம் வீதம் கொடுத்தால்தான் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்யமுடியும் எனச் சொன்னார். அதன்பின்னர், அன்றே எனது அப்பா மற்றும் அம்மா பெயரிலுள்ள மனைக்கு பட்டா உட்பிரிவு செய்ய ஆன்லைன் மூலம் விண்ணப்பம் எண் 2024/0105/24/635162-ன் படி எனது பெயரில் விண்ணப்பித்தேன். பின்னர் நேற்று 05.08.2024-ஆம் தேதி காலை சுமார் 11.40 மணிக்கு சின்னாரெட்டிபட்டி கிராம நிர்வாக அலுவலர் திருமதி. மீனாட்சி அவர்கள் அவரது செல்எண் 6380375587 லிருந்து எனது செல் எண். 9751583062 ற்கு தொடர்பு கொண்டு, ஆன்லைனில் விண்ணப்பித்த உங்கள் மனு எனது Login-ற்கு வந்துள்ளது, உங்களுக்கு முன்பு உள்ள பைல் அனைத்தும் முடித்து விட்டேன் அடுத்து உங்களது மனுதான் உள்ளது, அதனால் தான் கூப்பிட்டேன் எனக்கூறி, எனது அப்பா மற்றும் அம்மா பெயரில் கிரையம் பெற்ற மனையிடத்திற்கு உட்பிரிவு பட்டா கிடைக்க ஏற்பாடு செய்து தர, ஏற்கனவே கூறியது போது ஒரு பிளாட்டிற்கு ரூ.4,000/- வீதம் இரண்டு பிளாட்டிற்கு ரூ.8,000/-த்தை நாளை மதியம் அலுவலகத்தில் வந்து கொடுக்கும்படி கூறினார். அதற்கு நான், மேடம் ரூ.8,000/- அதிகமாக உள்ளது, எங்களது இடத்தையும் அளக்க வேண்டும் என்று கூறினேன். அதற்கு அவர் உங்களுக்காக தலா ஒரு பிளாட்டிற்கு ரூ.1,000/- குறைத்து இரண்டு பிளாட்டிற்கு மொத்தம் ரூ.2,000/-த்தை குறைத்து ரூ.6,000/-த்தை நாளை கொண்டு வாருங்கள் என்று கூறினார். பின்னர் நான் எனது அப்பா, அம்மாவிடம் பட்டா மாறுதல் சம்பந்தமாக VAO பணம் கேட்ட விபரத்தை கூறினேன். அவர்கள் மீண்டும் VAO திருமதி. மீனாட்சி அவர்களிம் பேசி பணம் கொடுக்காமல் பட்டா வழங்க கேட்கும்படி கூறினார்கள். நானும் 05.08.2024-ம் தேதி மாலை சுமார் 04.50 மணியளவில் எனது செல்போனிலிருந்து திருமதி மீனாட்சி அவர்களின் செல்போனில் தொடர்பு கொண்டு, நான் பெட்டிக்கடை தான் வைத்துள்ளேன். கிராமத்தில்

கடை வைத்துள்ளால் வியாபாரம் குறைவாகத்தான் இருக்கும். எனவே பணம் இல்லாமல் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.6,000/- கொடுக்காவிட்டால் உங்களது விண்ணப்பத்தை நிராகரித்துவிடுவேன் என கூறி, அந்த பணம் ரூ.6,000/-த்தை நாளை (06.08.2024) மதியம் அவரது சின்னாரெட்டிபட்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வந்து அவரை பார்த்து கொடுக்க வேண்டும் என்று கண்டிப்பாக கூறிவிட்டார். நான் மிகவும் கஷ்டத்தில் இருக்கிறேன். நான் போலியோவில் பாதிக்கப்பட்டு கால்கள் நடக்க முடியாத மாற்று திறனாளியாக இருந்தும் என்னிடம் லஞ்சம் கேட்கும் சின்னாரெட்டிபட்டி கிராம நிர்வாக அலுவலர் திருமதி. மீனாட்சி அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, பணமில்லாமல் அரசு வழங்கும் பட்டாவை எனது அப்பா மற்றும் அம்மா பெயரில் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்ய என்னிடம் ரூ.6,000/- லஞ்சம் கேட்கும் சின்னாரெட்டிபட்டி கிராம நிர்வாக அலுவலர் திருமதி. மீனாட்சி மீது சட்டப் பூர்வமான நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவை கொடுக்கின்றேன், இத்துடன் இ சேவை விண்ணப்ப எண் 2024/0105/24/635162-ன் ஒப்புகைச் சீட்டு மற்றும் 11.07.2024-ந் தேதி VAO-விடம் கொடுத்த எனது அப்பா மற்றும் அம்மா ஆகியோர் கிரையம் பெற்ற ஆவண எண் 1130/2011 நாள் 21.02.2011, இந்த இடத்தின் மூலப்பத்திர ஆவண எண். 2856/2009, நாள்: 03.08.2009, திருச்செந்தூர் கார்டன்ஸ் லேஅவுட், பழைய பட்டா மற்றும் வில்லங்க சான்று ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும், சின்னாரெட்டிபட்டி கிராம நிர்வாக அலுவலர் திருமதி. மீனாட்சி அவர்கள் கேட்ட லஞ்சப் பணம் ரூ.6,000/-ஐயும் கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள, (ஒ-ம்) **XXXXX** 06/08/24 (முகைதீன் ஷெரிப்)

**Sir, Received the typed complaint on 06.08.2024 at 07.15 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 08/2024 u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 at 08.00 hrs and took up investigation. Sd./-XXXXX 06-08-2024 [N. Bharathipriya] Inspector of Police, V&AC, Madurai.**

Original FIR along with original typed complaint of S.Mohideen Sharif, S/o.Sardar, Door No.4/364-29, Makkaramparai, Valaiyankulam, Thirupparan-kundram Taluk, Madurai District along with Xerox copies of 1) Sale deed Document No.1130/2011 Dated : 21.02.2011, 2) Parent Document No.2856/2009 Dated : 03.08.2009, 3) Thiruchenthoor Gardens Layout, 4) Old Patta No.855 of Chinnareddypatti Village, Peraiyur, 5) Encumbrance Certificates of Chinnareddypatti Village Survey No.93/3C are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

6-8-24

(N. Bharathipriya)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.